ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை – 600 006

மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள்

ந.க.எண்.82/C3/kalautsav/SS/2020-21, நாள். 05.10.2021

பொருள் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, 2021–22 ஆம் கல்வியாண்டு – கலாஉத்சவ்–21 போட்டிகள் – பள்ளி, மாவட்ட மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகளை நடத்துதல் – வழிகாட்டுதல்கள் வழங்குதல் மற்றும் நிதி விடுவித்தல் – சார்பு.

பார்வை
1. மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை, திட்ட ஏற்பளிப்புக் குழு கடிதம் எண். F.No.28-2/2021-IS-9, நாள் 03.09.2021, (வ.எண் – 83).
2. NCERT–ஆல் வழங்கப்பட்ட கலாஉத்சவ்–2021 வழிகாட்டுதல்கள்.

*******

ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி வாயிலாக அனைத்து வகை பள்ளிகளில் இடைநிலை மற்றும் மேல்நிலைப் வகுப்பு பயிலும் மாணவர்களது படைப்பாற்றலை வளர்க்கவும், நமது பாரம்பரிய கலைகளை இளம் தலைமுறையினரிடம் உயிர்ப்புடன் வைத்திருக்கவும், வாய்ப்பாட்டிசை, கருவியிசை, நடனம் மற்றும் காண்கலை (Vocal music Instrumental music, Dance, Visual Arts) எனும் நான்கு பெருந்தலைப்புகளில் கலாஉத்சவ் போட்டிகள் 2015-16ஆம் கல்வியாண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. பார்வை 1–ன்படி இந்தக்கல்வியாண்டிலும் (2021–22) இப்போட்டிகளை இணைய வழியாக (Online) நடத்திட அனுமதிக்கப்பட்டு அதற்காக ரூ.12,00,000 நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் யாவும் கீழ்க்கண்ட 9 பிரிவுகளில் மாணவ மாணவியருக்கென தனித்தனியே நடைபெற உள்ளது.

1. வாய்ப்பாட்டு இசை – செவ்வியல் (classic)
2. வாய்ப்பாட்டிசை – பாரம்பரிய நாட்டுப்புற வகை (Traditional Folk)
3. கருவி இசை – செவ்வியல்
4. கருவி இசை – பாரம்பரிய நாட்டுப்புற வகை
5. நடனம் – செவ்வியல்
6. நடனம் – பாரம்பரிய நாட்டுப்புற வகை
7. காண்கலை (இருபரிமாணம்)
8. காண்கலை (மூன்று பரிமாணம்)
9. உள்ளூர் தொன்மை பொம்மைகள் – விளையாட்டுகள்

இந்த ஆண்டு பள்ளி, மாவட்ட மற்றும் மாநில அளவிலான கலாஉத்சவ் போட்டிகள் முழுவதும் நடத்தி முடிக்கப்பட்டு NCERT–யின் அறிவுறுத்தல்படி தேசிய அளவிலான கலாஉத்சவ் போட்டிகளுக்கான நுழைவு பதிவுகள் (Entries) 10.12.2021 க்குள் சமர்ப்பிக்கவேண்டும்.

எனவே மேற்குறிப்பிட்டபடி தேசிய கலாஉத்சவ் போட்டிக்கான நுழைவுப் பதிவை குறித்த தேதிக்குள் சமர்ப்பிக்க ஏதுவாக கீழ்க்கண்ட தேதிகளில் பள்ளி, மாவட்ட, மாநில அளவில் கலாஉத்சவ் போட்டிகளை நடத்திட அறிவுறுத்தப்படுகிறது. போட்டிகள் நடத்துவதற்கான வழிகாட்டுதல்கள் இணைப்பு 2ல் வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | செயல்பாடு | காலக்கெடு |
|---|---|---|
| 1 | பள்ளி / மாவட்ட அளவில் | 06.10.2021 முதல் 03.11.2021 வரை |
| 2 | மாவட்ட அளவில் தேர்வு செய்யப்படும் மாணவர்களின் விவரம் மாநில திட்ட இயக்ககத்தில் சமர்ப்பித்தல் | 08.11.2021 ற்குள் |
| 3 | மாநில அளவிலான போட்டிகள் | 16.11.2021 முதல் 18.11.2021 வரை |

பள்ளி, மாவட்ட அளவிலான போட்டிகளை மாவட்டங்களின் வசதிக்கேற்ப Online / Recorded முறையிலோ அல்லது நேரடியாகவோ நடத்தி மாணவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். மாநில அளவிலான போட்டிகள் நேரிடையாக சேலம் மாவட்டத்தில் நடைபெற உள்ளது. தேசிய அளவிலான போட்டிகளை பொறுத்த வரையில் முழுவதும் Online முறையில் நேரலையாகவே (live) நடத்தப்படவுள்ளது.

இந்நிலையில் பள்ளி, மாவட்ட அளவிலான போட்டிகளை நடத்திட ஏதுவாக (இணைப்பு–1ன்படி) ஒரு கல்வி மாவட்டத்திற்கு ரூ.5,000 வீதம் நிதி விடுவிக்கப்படுகிறது. இந்நிதியைக் கொண்டு கொடுக்கப்பட்டுள்ள கலாஉத்சவ் 2021 வழிகாட்டுதல்கள்படி எவ்வித புகாருக்கும் இடமளிக்கா வண்ணம் சிறந்த நடுவர்களை தெரிவு செய்து போட்டிகளை நடத்தி மேற்குறிப்பிட்டபடி 08.11.2021–ற்குள் தேர்ந்தெடுக்கப்படும் மாணவ / மாணவியர் பெயர் பட்டியலை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து மாநில திட்ட இயக்ககத்திற்கு வழங்கிட அனைத்து மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் / முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட அளவிலான போட்டிகள் நடத்தி முடிக்கப்பட்டவுடனே அதற்காக விடுவிக்கப்பட்ட தொகைக்கான பயனீட்டுச் சான்றிதழை (UC) உரிய படிவத்தில் பூர்த்தி செய்து மாநிலத் திட்ட இயக்ககத்திற்கு அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் கடந்த ஆண்டுகளில் நடத்தப்பட்டது போல், இந்த ஆண்டும் இப்போட்டிகள் நடத்துவது குறித்த விரிவான வழிகாட்டுதல்களை மாவட்டங்களுக்கு வழங்கிட ஏதுவாக மாவட்ட அளவில் போட்டிகளை ஒருங்கிணைக்கும் பணியை மேற்கொள்ளும் உதவி மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் (ADPC/APO), கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (EDC) மற்றும் ஒரு ஆசிரியர் என மூன்று பேர் பங்குபெறும் வகையில் 08.10.2021 அன்று காலை 11 மணிக்கு இணைய வழியாக (online) நடத்தப்படும் ஒருங்கிணைப்பு கூட்டத்தில் தங்களது மாவட்டத்தை சார்ந்தவர்களும் கலந்து கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறது. இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான இணையவழி இணைப்பு (link) பின்னர் தெரிவிக்கப்படும்.

இணைப்பு

1. நிதிவிடுவிப்பு பட்டியல்.
2. வழிகாட்டு நெறிமுறைகள்.

5/10

மாநில திட்ட இயக்குநருக்காக

05/10/21

பெறுநர்

1. அனைத்து மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்/ முதன்மைக் கல்வி அலுவலர்கள் .
2. பள்ளிக் கல்வி ஆணையர்அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் தெரிவிக்கலாகிறது.

| State Project Directorate- Samagra Shiksha | | | |
|---|---|---|---|
| **Kala Utsav 2021 Fund Allottment details (District wise)**<br>**R.C.82/C3/kalautsav/SS/2020-21** | | | |
| **S.No.** | **Name of the District** | **No. of Education District** | **Fund Allotted (@ Rs.5000/- per Edn. Dt.)** |
| 1 | Ariyalur | 3 | 15000 |
| 2 | Chennai | 5 | 25000 |
| 3 | Coimbatore | 4 | 20000 |
| 4 | Cuddalore | 4 | 20000 |
| 5 | Dharmapuri | 3 | 15000 |
| 6 | Dindigul | 4 | 20000 |
| 7 | Erode | 5 | 25000 |
| 8 | Kancheepuram | 5 | 25000 |
| 9 | Kanniyakumari | 4 | 20000 |
| 10 | Karur | 2 | 10000 |
| 11 | Krishnagiri | 4 | 20000 |
| 12 | Madurai | 4 | 20000 |
| 13 | Nagapattinam | 3 | 15000 |
| 14 | Namakkal | 2 | 10000 |
| 15 | Perambalur | 2 | 10000 |
| 16 | Pudukkottai | 3 | 15000 |
| 17 | Ramanathapuram | 3 | 15000 |
| 18 | Salem | 5 | 25000 |
| 19 | Sivagangai | 3 | 15000 |
| 20 | The Nilgiris | 2 | 10000 |
| 21 | Thanjavur | 4 | 20000 |
| 22 | Theni | 3 | 15000 |
| 23 | Tiruppur | 4 | 20000 |
| 24 | Thiruvarur | 2 | 10000 |
| 25 | Thiruvallur | 5 | 25000 |
| 26 | Thoothukudi | 3 | 15000 |
| 27 | Trichirappalli | 4 | 20000 |
| 28 | Tirunelveli | 5 | 25000 |
| 29 | Tiruvannamalai | 5 | 25000 |
| 30 | Vellore | 5 | 25000 |
| 31 | Villupuram | 6 | 30000 |
| 32 | Virudhunagar | 4 | 20000 |
| **Total** | | **120** | **6,00,000** |
| **(Rupees Six lakh only)** | | | |

**For State Project Director**

5/10/21

# கலா உத்சவ் – 2021 வழிகாட்டு நெறிமுறைகள்

ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி வாயிலாக அனைத்து வகை பள்ளிகளில் இடைநிலை மற்றும் மேல்நிலைப் வகுப்பு பயிலும் மாணவர்களது படைப்பாற்றலை வளர்க்கவும், நமது பாரம்பரிய கலைகளை உயிர்ப்புடன் வைத்திருக்கவும், வாய்ப்பாட்டிசை, கருவியிசை, நடனம் மற்றும் காண்கலை (Vocal music Instrumental music, Dance, Visual Arts) எனும் நான்கு பெருந்தலைப்புகளில் கலாஉத்சவ் போட்டிகள் 2015-16ஆம் கல்வியாண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. இந்தக்கல்வியாண்டிலும் (2021–22) இப்போட்டிகளை இணைய வழியாக (Online) நடத்திட அனுமதிக்கப்பட்டுள்ளது.

## 1.0 கலாஉத்சவ் மரபு (Legacy)

சமூக அமைப்பின் மகிழ்ச்சியின் வெளிப்பாடாக, உயிர்ப்புடன் இருக்கும் பாரம்பரியக் கலைகளை மாணவர்கள் அறிந்திடும் வகையிலும், நமது கலை வடிவங்கள் பற்றிய அறிமுகத்தையும், புரிதலையும் உருவாக்கி அதன் மூலம் அவர்களின் கலைத்திறனைக் காட்சிப்படுத்த வழிவகை செய்யும் வகையிலும், கலா உத்சவ் நிகழ்வு நடத்தப்படுகிறது. இந்நிகழ்வுகள் வேறுபட்ட கலை கலாச்சாரங்கள் பற்றி பள்ளி, மாவட்டம், மாநிலம் மற்றும் தேசிய அளவுகளில் புரிந்து கொள்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தருகின்றன. மேலும் இந்தியாவின் கலாச்சார வளம் பற்றிய ஒரு விழிப்புணர்வை உருவாக்கி அதனைப் புரிந்து கொள்வதன்மூலம் சமுதாய மேம்பாட்டிற்கும் மாணவர்கள் பயனுள்ளவர்களாக இருக்க முடியும் என்பதற்கும் கலாஉத்சவ் வழியமைக்கிறது.

கலாஉத்சவ் நிகழ்வுகள் சமூகப் பொருளாதார பின்னடைவுகளில் இருக்கின்ற மாணவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி மாணவர்கள்(CWSN), ஆகியோர் பிற மாணவர்களுக்கு இணையாக கலைத் திறனை வெளிப்படுத்துவதற்கு வழியமைக்கிறது. இதில் Identification, Exploring, Understanding, Practicing and Showcasing எனும் ஐந்து நிலைகள் உள்ளன. இதில் ஒரு மாணவன் முழுமையாக ஈடுபட்டால் அது அந்தக் கலையினைப் படைத்தளித்தலோடு மட்டுமல்லாமல் அந்தக் கலையாகவே வாழத் தொடங்குகிறான்.

இதன்மூலம் தகுதியான மாணவனை அந்த வட்டாரத்தின் பாரம்பரிய கலையின் வருங்கால பிரதிநிதியாகப் (Ambassador) போற்றி வளர்ப்பதற்கும், பள்ளிகள் பாரம்பரிய கலைகளின் பயிற்சி கூடமாக மாறுவதற்கும் வழியமைக்கும்.

## 2.0 பொதுவான வழிகாட்டி நெறிமுறைகள்:

கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் (2021–22) கலா உத்சவ் – 2021 போட்டிகள் மாணவ மாணவியர்தம் தனித்திறனை மதிப்பிடும் நோக்கில் தனிநபர் (solo) நிகழ்வுகளாக நடத்தப்படும். மேலும் மாணவர்களுக்கும் – மாணவியர்களுக்கும் என தனிப்பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது.

Covid–19 தொற்று காரணமாக கலாஉத்சவ் 2021 போட்டிகள் அனைத்தும் இணைய வழியாகவே (online) நடத்தப்படவுள்ளது. இதுசார்ந்த காலக்குறிப்புகள் (Timeline) அவ்வப்போது அறிவிக்கப்படும்.

### 2.1 கலை இனங்கள்

கலா உத்சவ் 2021ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சிகள் யாவும் பாரம்பரிய / நாட்டுப்புற / செவ்வியல் சார்ந்த கீழ்க்கண்ட ஒன்பது பிரிவுகளில் போட்டிகள் நடைபெற உள்ளன.

1. வாய்ப்பாட்டு இசை – செவ்வியல் (classic)
2. வாய்ப்பாட்டிசை – பாரம்பரிய நாட்டுப்புற வகை (Traditional Folk)
3. கருவி இசை – செவ்வியல்
4. கருவி இசை – பாரம்பரிய நாட்டுப்புற வகை
5. நடனம் – செவ்வியல்
6. நடனம் – பாரம்பரிய நாட்டுப்புற வகை
7. காண்கலை (இருபரிமாணம்)
8. காண்கலை (மூன்று பரிமாணம்)
9. உள்ளூர் தொன்மை பொம்மைகள் – விளையாட்டுகள்

**2.2 தகுதி:**

அரசு, அரசு உதவி, தனியார் மற்றும் மைய/மாநில அரசுகளின் நிர்வாக அமைப்பு சார் பள்ளிகளில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகள் பங்கு பெறலாம்.

மாநில அளவிலான போட்டிகளைத் தொடர்ந்து தேசிய அளவிலான போட்டிகள் நடைபெறும். இதில் 36 மாநில / UT, 1 KVS மற்றும் 1 NVS அணிகள் ஆக மொத்தம் 38 அணிகள் பங்கு கொள்ளும்.

**2.3 தேசிய அளவிலான கலா உத்சவ் – 2021**

தேசிய அளவிலான கலாஉத்சவ் 2021 போட்டிகள் இணையவழியாக (Online) நேரடி நிகழ்ச்சியாக (Live) நடத்தப்படும். இது சார்ந்த கூடுதல் விவரங்கள், தேதிகள், அட்டவணைகள் அவ்வப்போது தெரிவிக்கப்படும். போட்டியின் நடுவர்கள் போட்டிகள் நடைபெறும்போது படைப்பாளர்களோடு வினவும்படி இருவழி (Double way) ஒலி வாங்கி அமைப்புகள் கொண்ட Virtual plat form மூலம் நடத்தப்படும்.

**2.4 போட்டிகளுக்கான பதிவு செய்தல் முறை**

கலாஉத்சவ் போட்டிகள் யாவும் பள்ளி மாவட்ட மற்றும் மாநில அளவுகளில் நடத்தப்பட்டு மாநில அளவில் தேர்வு பெறுவோர் மட்டும் தேசிய அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். மாநில அளவிலான போட்டிக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து 9 மாணவிகள் + 9 மாணவர்கள் என 18 பங்கேற்பாளர்கள் தேர்வு செய்யப்படுவர். இதேபோல் தேசிய அளவிலான போட்டியில் கலந்து கொள்ள மாநில அளவில் முதலிடம் பெறும் 9 மாணவிகள் + 9 மாணவர்கள் என 18 பேர் தேர்வு செய்யப்படுவர்.

கலா உத்சவ் போட்டிகள் கீழ்வரும் பிரிவுகளில் நடத்தப்படவுள்ளது

| வ. எண் | வகை | பங்கேற்பாளர் | விவரக்குறிப்புகள் |
|---|---|---|---|
| 1 | வாய்ப்பாட்டு இசை – செவ்வியல் (classic) | 1 மாணவி | ஹிந்துஸ்தாணி/கர்னாடிக் |
| | | 1 மாணவன் | |
| 2 | வாய்ப்பாட்டிசை – பாரம்பரிய நாட்டுப்புற வகை (Traditional Folk) | 1 மாணவி | ஏதேனும் வட்டாரம் சார்ந்த அல்லது ஏதேனும் ஒரு பாரம்பரிய பாணி சார்ந்தது |
| | | 1 மாணவன் | |

| | | | |
|---|---|---|---|
| 3 | கருவி இசை – செவ்வியல் | 1 மாணவி | ஹிந்துஸ்தாணி/கர்னாடிக் |
| | | 1 மாணவன் | |
| 4 | கருவி இசை – பாரம்பரிய நாட்டுப்புற வகை | 1 மாணவி | ஏதேனும் இந்திய பாரம்பரிய இசைக் கருவி |
| | | 1 மாணவன் | |
| 5 | நடனம் – செவ்வியல் | 1 மாணவி | செவ்வியல் வடிவம் |
| | | 1 மாணவன் | |
| 6 | நடனம் – பாரம்பரிய நாட்டுப்புற வகை | 1 மாணவி | பாரம்பரிய நாட்டுப்புறவகை |
| | | 1 மாணவன் | |
| 7 | காண்கலை (இருபரிமாணம்) | 1 மாணவி | கோட்டு ஓவியம், வண்ண ஓவியம், அச்சு ஓவியம் |
| | | 1 மாணவன் | |
| 8 | காண்கலை (மூன்று பரிமாணம்) | 1 மாணவி | சிற்பம் |
| | | 1 மாணவன் | |
| 9 | உள்ளூர் தொன்மை பொம்மைகள் – விளையாட்டுகள் | 1 மாணவி | உள்ளூர் தொன்மை பொம்மைகள் / விளையாட்டுகள் |
| | | 1 மாணவன் | |

### 2.5விருதுகள்

தேசிய அளவில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளில் வெற்றி பெறும் மாணவ, மாணவியருக்கு ரொக்கப் பரிசு, கேடயம் மற்றும் பதக்கத்துடன் சான்றிதழ்களும் வழங்கப்படும். தேசிய அளவில் பங்கு பெறும் அனைவருக்கும் பங்கேற்றமைக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும். (பரிசுத்தொகை மாநிலத் திட்ட இயக்கத்திற்கு டிஜிட்டல் வழியே வழங்கப்படும்).

முதல் பரிசு – ரூ. 25,000
இரண்டாம் பரிசு – ரூ. 20,000
மூன்றாம் பரிசு – ரூ. 15,000

### 3.0 போட்டிகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகள்

தேசிய அளவில் நடைபெறும் கலா உத்சவ் போட்டிகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே வழங்கப்பட்டுள்ளது. இவ்வழிகாட்டு நெறிமுறைகளையே மாவட்ட மற்றும் மாநில அளவில் நடத்தப்படும் போட்டிகளுக்கும் பின்பற்றப்படவேண்டும்.

### 3.1 தனிநபர் வாய்ப்பாட்டிசை:

வாய்ப்பாட்டிசை பின்வரும் இரு பிரிவுகளில் நடத்தப்படும்

1. வாய்ப்பாட்டிசை – செவ்வியல்
2. வாய்ப்பாட்டிசை – பாரம்பரிய நாட்டுப்புறம்

பொது விவரங்கள்

- நிகழ்ச்சியின் கால அளவு – **4–6** நிமிடங்கள்
- உடையலங்காரம், அமைப்பு, பயன்படுத்தப்படும் பொருள் நிகழ்ச்சிக்குப் பொருத்தமுடையதாக இருத்தல் வேண்டும்.
- தொழிற்கலைஞர் இசைத்த மற்றும் வர்த்தகம் சார்ந்த பின்னிசை (Track) அனுமதிக்கப்படமாட்டாது.
- முதன்மைப் படைப்பாளிக்கு பக்க வாத்திய இசைக்கருவிகள் ஆசிரியரால் / மாணவரால் (ஒரு நபர்) இசைக்கப்படலாம்.

**மதிப்பீட்டு தாள் – செவ்வியல் வாய்ப்பாட்டு**

| பாடும் பாணியின் நம்பகத்தன்மை | சுரம் | தாளம் | பாடல் உச்சரிப்பு | படைப்பாற்றல் | படைப்பின் வரிசை முறை | ஒட்டு மொத்த வழங்கும் திறன் | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|---|
| 10 | 20 | 20 | 15 | 10 | 10 | 15 | 100 |

**மதிப்பீட்டு தாள் – பாரம்பரிய நாட்டுப்புறவகை**

| பாடும் பாணியின் நம்பகத்தன்மை | சுரம் | தாளம் | பாடல் உச்சரிப்பு | உடை அலங்காரம் | பொருள் பயன்பாடு/ வரிசைமுறை | வழங்கும் திறன் | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|---|
| 10 | 20 | 20 | 15 | 15 | 5 | 15 | 100 |

### 3.2. தனிநபர் கருவி இசை

கருவி இசைப்போட்டி கீழ்வரும் இரண்டு வகைகளில் நடைபெறும்

1. கருவி இசை – செவ்வியல்
2. கருவி இசை – பாரம்பரிய நாட்டுப்புற வகை

பொது விவரங்கள்

- நிகழ்ச்சியின் கால அளவு – **4–6** நிமிடங்கள்
- பக்க வாத்திய இசைக்கருவியினை ஓர் ஆசிரியர் / மாணவர் இசைக்கலாம்
- மின்னியல் / Programmed இசைக்கருவிகள் அனுமதிக்கப்படமாட்டாது.
- உடை, அமைப்பு, பயன்படுத்தப்படும் பொருள் ஆகியன நிகழ்ச்சிக்குப் பொருத்தமுடையதாக இருத்தல் வேண்டும்.
- பாரம்பரிய நாட்டுப்புற கருவி இசைப்பிரிவில் உள்நாட்டுத் தொன்மைக் கால இசைக்கருவிகளே அனுமதிக்கப்படும்.
- இசைக் கருவி பற்றிய சுருக்க உரை (வரலாறு, பாரம்பரியம், முக்கியத்துவம் இன்றைய நிலை பற்றி) ஆங்கிலத்தில் 100 வார்த்தைகளுக்கு மிகாமல் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மதிப்பீட்டு தாள் –கருவி இசை – செவ்வியல்

| இசைக்கும் பாணியின் நம்பகத்தன்மை | வெளிப்பாடு | தாளம் | தொணியின் தரம் | படைப்பாற்றல் மற்றும் நம்பகத் தன்மை | ஒட்டு மொத்த வழங்கும் திறன் | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|
| 10 | 20 | 20 | 15 | 15 | 20 | 100 |

மதிப்பீட்டுத்தாள் – கருவி இசை – பாரம்பரிய நாட்டுப்புறம்

| இசைக்கும் பாணியின் நம்பகத்தன்மை | வெளிப் பாடு | தாளம் | தொணியின் தரம் | பொருள்கள் பயன்பாடு | உடை அலங்காரம் | ஒட்டு மொத்த வழங்கும் திறன் | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|---|
| 10 | 20 | 20 | 15 | 10 | 10 | 15 | 100 |

**3.3.தனிநபர் – நடனம்**

இந்தப் போட்டி கீழ்வரும் இரண்டு வகைகளில் நடைபெறும்

1. நடனம் – செவ்வியல்
2. நடனம் – பாரம்பரிய நாட்டுப்புறம்

**பொதுவான விவரங்கள்**

1. நிகழ்ச்சியின் கால அளவு – 4–6 நிமிடங்கள்
2. படைப்பு அந்தந்த மாநில / மண்டலம் சார்ந்த பாணியில் (style) இருக்க வேண்டும்
3. இசை, பதிவு செய்யப்பட்டதாக (அ) உயிரோட்டமாகவோ இருக்கலாம்.
4. உடை, அமைப்பு, பயன்படுத்தப்படும் பொருள் நிகழ்ச்சிக்குப் பொருத்தமுடையதாக இருத்தல் வேண்டும்.
5. அமைப்பு / உடைகள் முதலியன அந்தந்த மாநில பொறுப்பில் அமைக்கப்பட வேண்டும்

மதிப்பீட்டு தாள் – நடனம் செவ்வியல்

| நடனம் – பாணி | படைப்பு | தாளம்/ பாவணை | இசை | உடை அலங்காரம் | உடல் அலங்காரம் | படைப் பாற்றல் | ஒட்டு மொத்த வழங்கும் திறன் | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | 10 | 15 | 15 | 10 | 10 | 15 | 15 | 100 |

மதிப்பீட்டு தாள் – நடனம் – பாரம்பரிய நாட்டுப்புறம்

| நடனம் – பாணி | படைப்பு | தாளம்/ பாவணை | இசை | உடை அலங்காரம் | உடல் அலங்கரம் | படைப் பாற்றல் | ஒட்டு மொத்த வழங்கும் திறன் | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | 10 | 15 | 15 | 10 | 10 | 15 | 15 | 100 |

**3.4 காண்கலை (Visual Art)**

போட்டிகள் கீழ்வரும் மூன்று வகைகளில் நடைபெறும்

1. காண்கலை – இருபரிமாணம்,
2. காண்கலை – முப்பரிமாணம்
3. உள்ளூர் தொன்மை பொம்மைகள் – விளையாட்டுகள்

**பொது விவரங்கள்:**

- கலைப்படைப்புகள் ஏற்கனவே செய்ததாக இருக்கக் கூடாது. போட்டி நடைபெறும் நாள்களில் செய்யப்பட வேண்டும்.
- இரண்டு நாள் காலக்கெடுவிற்குள் முடிக்கப்படவேண்டும்.
- பங்கேற்பாளர்கள் தான் படைத்த படைப்புகளை இரண்டாம் நாளன்று (குறிப்பிடப்படும் நாளில்) பதிவேற்றம் செய்தல் வேண்டும்.
- பங்கேற்பாளர் அவரவர் விருப்பத்திற்கிணங்க பொருள் / வண்ணம் / ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- பங்கேற்பாளர்கள் படைப்புகளை உருவாக்கும் இரண்டு நாட்களிலும் Online-ல் இருக்க வேண்டும். எந்நேரத்திலும் நடுவர்கள் அவர்களோடு உரையாடலாம்.
- 2D, 3D மற்றும் பொம்மைகள் ஆகியவற்றின் அளவீடு அவரவர் கையாளுமைக்கு (Handling) உட்பட்டதாக அமைய வேண்டும். மேலும் இருதினங்களுக்குள் முடிக்க வல்லதாகவும் இருத்தல் வேண்டும்.
- உள்ளூர் பாரம்பரிய பொம்மைகள் / விளையாட்டுகள் நம்பகத்தன்மை, செயல்பாட்டு துள்ளியம் (functional accuracy) அசல் வடிவம் (original design) கொண்டனவாக அமைதல் வேண்டும்.

**பொம்மைகளின் உருவாக்கம்**

- விவசாய செயல் முறை மற்றும் உபகரணங்கள்
- பஞ்ச தந்திரம், jataka கதைகள் / நாட்டுப்புற பழங்கதைகளின் பாத்திரங்கள் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைப் பற்றியதாக இருக்கலாம்.
- அசல் வடிவத்திற்குப் பயன்படும் பொருள்களைத்தான், உருவாக்கும் பொம்மைகளிலும் பயன்படுத்துதல் வேண்டும். அப்பொருள்களுக்குத் தடைகள் இருப்பின் சுற்றுச்சூழல் சாதகமான பொருள்களைப் பயன்படுத்தலாம்.
- பொம்மைகளைச் செய்கிற செயல்பாட்டின் மொத்த பதிவு (recording) தேவைப்படும்போது பார்வைக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(1) மதிப்பீட்டுத்தாள் – காண்கலை இரு பரிமாணம்

| தொனி | கட்டமைப்பு | அசல் தன்மை | நேர்த்தி | உத்தி / நுணுக்கம் | ஒட்டு மொத்தத் தாக்கம் | வழங்கல்/ விளக்கம் | கூடுதல் மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 10 | 15 | 20 | 10 | 10 | 15 | 20 | 100 |

(2) மதிப்பீட்டுத்தாள் – காண்கலை முப்பரிமாணம்

| தொனி | செய் பொருளின் பயன்பாடு | அசல் / மூலத்தன்மை | முடித்தலில் நேர்த்தி | நுணுக்கத் திறன் | ஒட்டு மொத்தத் தாக்கம் | வழங்கல்/ விளக்கம் | கூடுதல் மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 10 | 15 | 20 | 10 | 10 | 15 | 20 | 100 |

(3) மதிப்பீட்டுத்தாள் – உள்ளூர் பாரம்பரிய பொம்மைகள்

| அனுபவம் | செய்பொருளின் பயன்பாட்டு / மேம்பாடு | அசல்தன்மை மற்றும் கருத்துசார் படைப்பாற்றல் | முடித்தலில் நேர்த்தி | நுணுக்கத் திறன் | ஒட்டு மொத்தத் தாக்கம் | வழங்கல்/ விளக்கம் | கூடுதல் மதிப்பெண்க ள் |
|---|---|---|---|---|---|---|---|
| 10 | 15 | 20 | 10 | 10 | 15 | 20 | 100 |

பொதுவிதிகள்

- ஒரு மாணவன் / மாணவி ஏதேனும் ஒரு போட்டியில் மட்டுமே கலந்து கொள்ள முடியும்.

- கருத்துச் சுருக்கம்

படைக்கப்படும் நிகழ்ச்சி குறித்த கருத்துச் சுருக்கம் 100 வார்த்தைகளுக்கு உட்பட்டு ஆங்கிலம் / இந்தியில் எழுதப்படவேண்டும். இக்கருத்துச் சுருக்கம் பங்கேற்பாளரால் மட்டுமே எழுதப்படவேண்டும். கருத்துச் சுருக்கத்தில் – படைக்கப்படும் நிகழ்ச்சி குறித்த கலை வடிவம், அது தோன்றிய இடம், கையாளும் சமூகப் பிரிவு, நிகழ்த்தப்படும் தருணங்கள், பயன்படுத்தப்படும் அலங்கார உடைகள், பக்க வாத்தியங்கள், பயன்படுத்தப்படும் பொருள்கள் சமூகச் சூழலில் அக்கலையின் தொடர்பு, நுட்பங்கள் பிற பொருட்கள் முதலியன பற்றிய விவரங்கள் இடம் பெற வேண்டும்.

மேலும் இக்கருத்துச் சுருக்கத்தில் பங்கேற்பாளர் பங்கேற்றது தொடர்பான 5 புகைப்படங்கள் (அதிகபட்சம்) இடம்பெற வேண்டும்.

- காணொலிப் படம்

மாவட்ட அளவில் நடைபெற்று தேர்வு செய்யப்பட்ட நிகழ்ச்சியின் காணொளிப்படம் 5 நிமிசங்களுக்குள்ளான நீட்சி கொண்டதாக பதிவு செய்யப்பட்டு மாநில திட்ட இயக்ககத்தின் rmsatnkalautsav@gmail.com என்ற மின்னஞ்சலின் முகவரியில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

மாவட்ட அளவில் தேர்வு செய்யப்பட்ட 18 பங்கேற்பாளர்களின் நுழைவு விவரம் (Entry Details) இணைக்கப்பட்டுள்ள (Annexure I) படிவத்தின்படி (Proforma) நிரப்பப்பட்டு மாநிலத்திட்ட இயக்ககத்திற்கு போட்டிகள் முடிந்த இரு தினங்களுக்குள் தவறாது அனுப்பப்படுதல் வேண்டும்.

மேற்கண்ட கலா உத்சவ் 2021 வழிகாட்டுதல் செயல்முறைகளைப் பின்பற்றி இந்தக் கல்வியாண்டிற்கான பள்ளி மற்றும் மாவட்ட அளவிலான கலா உத்சவ் போட்டிகளை எவ்வித புகாருக்கும் இடமளிக்காவண்ணம் சிறப்புற நடத்திட அனைத்து மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் / முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (மேலும் விவரங்களுக்கு NCERT கலா உத்சவ் இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம்).

**நகல்:**

1. ஆணையர், பள்ளிக் கல்வி ஆணையரகம்,
   சென்னை – 600 006.

2. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
   சென்னை – 600 006

## Guidelines - Annexure – 1

Proforma For Submitting Entries for Online Kala Utsav – 2020
(To be sent by the District to participate at State Level)
Section A
General Information

1. Name of the District : ----------------------
2. Details of the Participating team : -------------------- (in excel format)

| Sl. No | Name of the Student | Class | Sex (Male / Female) | Name of the School, Address with PIN code and Type of the school (Government /Government Aided/KVS/NVS/Private School/other) | Name of the Art Form /Gategory |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |

3. Details of the Teacher / Mentor (in excel format)

| Sl. No | Name of the Student | Class | Sex (Male / Female) | Name of the School, Address with PIN code and Type of the school (Government /Government Aided/KVS/NVS/Private School/other) | Name of the Art Form /Gategory |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |

4. Details of the Accompanist (Teacher / Student) ( in excel format)

| Sl. No | Name of the Student | Class | Sex (Male / Female) | Name of the School, Address with PIN code and Type of the school (Government /Government Aided/KVS/NVS/Private School/other) | Name of the Art Form /Gategory |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |

5. The textual summary (write up) in Hindi or English must be submitted in not more than 100 words. (in words form)
6. Video film of the presentation and process of the art form of not more than 5 minutes. (For details refer to para 2.4.2) (MOV/MP4 form)